# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,921/5 – 1970 සැප්තැම්බර් 3 වැනි බ්‍රහස්පතින්ද — 1970.9.3

14,921/5 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 3 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

### உள்ளூராட்சி அறிவித்தல்கள்

ச.வ. பி. 29/56

**பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்**

**183 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

1968 இன் 42 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுன (256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 183 ம் பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர், பீலிக்ச் றெஜிஞெல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான்—

(அ) கூட்டங்கள் நடாத்துவதற்குத் தொடர்ந்து மறுத்தமையும்,

(ஆ) சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினுல் சுமத்தப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதில் வேண்டுமென்றே அசட்டையும்—

பிலியந்தலைப் பட்டின சபையினிடத்து இருக்கின்றதென்பதற்குப் போதிய ஆதாரம் உண்டு எனத் திருப்திப்பட்டுள்ளேனுதலால், இக்கட்டளை வாயிலாக—

(அ) பிலியந்தலைப் பட்டின சபையைக் கலைக்கிறேன் ; அத்துடன்

(ஆ) சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் கீழ் அந்நகரத்திற்கு ஒரு புதிய பட்டின சபை அமைக்கப்படும் வரை, அந்நோக்கத்திற் கெனச் சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு பட்டின சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதற்குரிய கடமைகளைச் செய்வதற்குமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஒலிவர் குருசிங்க அவர்களை பிலியந்தலை நகரத்தின் கருமங்களை நிர்வகிப்பதற்கான, விசேட ஆணையாளராக நியமிக்கிறேன்.

ෆී. ආර්. ඩී. බණ්ඩාරනායක,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 3 ந் உ.
9–416

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.